ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 256) Nov (1)/ 2017



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமாநுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. லக்ஷ்மீ தந்த்ரம் ........................................................................3

2. ஸ்ரீபாஷ்யம் ........................................................................5

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ........................................................................8

4. ஆசார்ய ஹ்ருதயம்........................................................................10

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)........................................................................17

6. இராமாநுச நூற்றந்தாதி........................................................................23



Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog: namperumal.wordpress.com Groups: groups.yahoo.com/emperumanar

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 76)

சக்ர:-

16-2. க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ஸத்பாவம் மந்த்ராணாம் வத மே அம்புஜே
17-1. யத் விஜ்ஞாய ந முஹ்யந்தி ஸித்தமேஷ்யந்தி சாசிராத்

**பொருள்** – இந்த்ரன் மஹாலக்ஷ்மியிடம், "தாமரையில் உதித்தவளே! க்ஷேத்ர மற்றும் க்ஷேத்ரஜ்ஞ மந்த்ரங்களின் வேறுபாடுகளைக் குறித்து எனக்கு உரைப்பாயாக. அதாவது, எந்த ஒன்றை அறிவதன் மூலம், உபாஸகனுடைய விருப்பங்கள் விரைவாக நிறைவேறுகிறதோ, எது அவனை மயக்கத்தில் ஆழாமல் காக்கிறதோ, அதனைக் கூறுவாயாக", என்றான்.

ஸ்ரீ:-

17-2. பீஜம் பீஜவதாம் ஜீவ: சிஷ்டம் க்ஷேத்ரம் ப்ரகீர்த்திதம்
18. நிர்பீஜாநாமாதி ஜீவ: க்ஷேத்ரம் து பரிசேஷிதம்
பீஜாநாம் ச ஏவ பிண்டாநாம் அஸ்து க்ஷேத்ரஜ்ஞ உச்யதே

**பொருள்** – மஹாலக்ஷ்மி கூறத் தொடங்குகிறாள்: பீஜத்துடன் கூடிய மந்த்ரங்களில், பீஜம் என்னும் பகுதியானது ஜீவாத்மாவை (க்ஷேத்ரஜ்ஞன்) குறிப்பதாகும்; எஞ்சிய பகுதிகளானவை சரீரத்தை (க்ஷேத்ரம்) குறிக்கும். பீஜம் இல்லாத மந்த்ரங்களில், அந்த மந்த்ரத்தின் முதல் ஒலியானது ஜீவாத்மாவையும், மற்றவை சரீரத்தையும் குறிக்கும். பீஜம் அல்லது பிண்டம் மட்டுமே உள்ள மந்த்ரங்களில், "அ" என்னும் ஒலியானது ஜீவாத்மாவையும், எஞ்சியவை சரீரத்தையும் குறிப்பதாகும்.

19. சிஷ்டம் து க்ஷேத்ரம் உத்திஷ்டம் அகாரரஹிதே புந:
க்ஷேத்ரஜ்ஞ: ஸ்வர உத்திஷ்ட: கேவலே ச ஸ்வரே புந:

20. ஜீவ: ஸ்யாத் ப்ரதமா மாத்ரா த்விதீயாதி தநுர்பவேத்
ஏகமாத்ரே து ஜீவ: ஸ்யாத் ஸம்ஸ்கார: அத்புத லக்ஷண:

21. உச்சார்யமாணம் க்ஷேத்ரம் ஸ்யாந்நி: ஸ்வரே பிண்டகே புந:
ப்ரதமோ ஜீவ உத்திஷ்ட: சிஷ்டம் க்ஷேத்ரம் ப்ரசக்ஷதே

22-1. க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞா ஸத்பாவ ஏஷ தே ஸம்ப்ரதர்சித:

**பொருள்** – "அ" என்னும் எழுத்து இல்லாத மந்த்ரங்களில் காணப்படும் முதல் ஸ்வரமானது ஜீவாத்மாவைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. ஒரு மந்த்ரத்தில் ஸ்வரங்கள் மட்டுமே காணப்பட்டால், முதல் மாத்திரை என்பது ஜீவாத்மாவையும், இரண்டாவது மாத்திரை தொடங்கி உள்ளவை சரீரத்தையும் குறிப்பதாகும். ஒரு மாத்திரை மட்டுமே உள்ள மந்த்ரத்தில் காணப்படும் ஸம்ஸ்காரம் (மத்யமா என்னும் பகுதி) என்பது ஜீவாத்மாவாகவும், மற்ற ஓசைகள் சரீரமாகவும் கொள்ளப்படுகிறது. ஸ்வரங்கள் இல்லாமல் உள்ள பிண்ட மந்த்ரங்களில் உள்ள முதல் எழுத்தானது ஜீவாத்மாவாகவும், எஞ்சிய பகுதிகள் சரீரமாகவும் கொள்ளப்படுகிறது. இப்படியாக உனக்கு க்ஷேத்ர மற்றும் க்ஷேத்ரஜ்ஞ மந்த்ரங்களின் வேறுபாடுகளைக் குறித்து உரைத்தேன்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 256)

**ஸித்தாந்தம்** – இவ்விதம் கூறினால் நாம் உரைக்கும் பதிலானது "ஈக்ஷதி கர்ம வ்யபதேசாத் ஸ:" என்பதாகும். "ஈக்ஷதி கர்ம ஸ: - இங்கு காணப்படும் புருஷன் பரமாத்மாவே" ஆவான். எப்படி? "வ்யபதேசாத்". இங்கு ஈக்ஷதி கர்மத்திற்கு (காணப்படுவதாகிய செயலுக்கு) இலக்காக உள்ளவன் பரமாத்மாவே ஆவான். காணும் கர்மம் குறித்து விளக்குகின்ற ச்லோகத்தில் ப்ர. (5-7) – தம் ஓம் காரேண ஏவ ஆயதநேந அந்வேதி வித்வாந் யத் தத் சாந்தம் அஜரம் அம்ருத்யும் அபயம் பரம் ச – அந்த வித்வான் (உபாஸகன்) ஓம் என்ற அக்ஷரத்தின் ஆதாரத்துடன் சாந்தமானதும், வயோதிகம் அற்றதும், மரணம் அற்றதும், பயம் அற்றதும், உயர்ந்ததும் ஆகிய வஸ்துவை அடைகிறான் - என்று கூறப்பட்டது. இங்குள்ள சாந்தம், வயோதிகம் அற்ற தன்மை, பயம் அற்ற தன்மை, மரணம் அற்ற தன்மை ஆகியவை பரமாத்மாவிற்கு மட்டுமே உரிய தன்மைகள் ஆகும். இதனை சாந். (4-15-1) – ஏதத் அம்ருதம் அபயம் ஏதத் ப்ரஹ்ம - அது மரணம் அற்றது, பயம் அற்றது, ஆகவே ப்ரஹ்மம் - போன்ற ச்ருதிகளில் கூறப்பட்டுள்ளது காண்க. மேலும் ப்ர. (5-5) – ஏதஸ்மாத் ஜீவகநாத் பராத்பரம் – ஜீவாத்மாக்களைக் காட்டிலும் உயர்ந்தவன் – என்று கூறுவது பரமாத்மாவை மட்டுமே அல்லாமல் நான்முகனை அல்ல; எனென்றால் நான்முகன் என்பவனும் "ஜீவகநாத் – ஜீவகணங்கள்" என்பதில் அடங்கிவிடுகிறான். அவன் தனது கர்மம் காரணமாக எடுக்கப்பட்ட சரீரத்துடன் உள்ளதால் ஜீவகணத்தைச் சேர்ந்தவன் ஆகிறான். நான்முகன் விஷயத்தில் ச்வே. (6-18) - யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்- முதலில் நான்முகனைப் படைக்கிறான் - என்றுள்ளது.

மேலே (பூர்வபக்ஷம்) கூறப்பட்ட கருத்தான – அந்தரிக்ஷத்திற்கும் அப்பால் ப்ரஹ்மலோகம் உள்ளது, இது நான்முகனின் லோகம் ஆகும், ஆகவே இங்கு உள்ளவன் நான்முகனே ஆவான் - என்பது சரியல்ல. ஏன்? ப்ர. (5-7) - யத் தத் சாந்தம் அஜரம் அம்ருத்யும் அபயம் - சாந்தமானது, வயோதிகம் அற்றது, மரணம் அற்றது, பயம் அற்றது - என்பதன் மூலம், காண்பவனாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிச்சயிக்கப்பட்டது. ஆகவே த்யானம் செய்த பின்னர் ஒருவன் அடையும் லோகமாகவும், இருப்பிடத்தின் மேன்மையுடன் கூறப்படுவதும் ஆகிய ப்ரஹ்மலோகம் என்பது அழியக்கூடிய நான்முகனின் ப்ரஹ்மலோகமாக இருக்கமுடியாது. மேலும் ப்ர. (5-5) – யதா பாதோதர: த்வச்சா விநிர்முச்யதே ஏவம் ஹ வை ஸ பாப்மநா விநிர்முக்தி: ஸ ஸமாபி: உந்நீயதே ப்ரஹ்மலோகம் – பாம்பு தனது சட்டையை உரிப்பது போன்று தனது பாபங்களிலிருந்து விடுபட்டவனாக, ஸாமகானம் பாடுபவர்களால் ப்ரஹ்மலோகத்தில் சேர்க்கப்பட்டு – என்பதன் மூலம், அனைத்துவிதமான பாபங்களும் நீங்கப்பெற்ற ஒருவன் அடையும் இடமானது, நிச்சயமாக நான்முகனின் இடமாக இருக்கமுடியாது; இந்தக் காரணத்தினால்தான் இங்கு கூறப்பட்ட உதாரண ச்லோகமான ப்ர. (5-7) - யத் தத் கவயோ வேதயந்தே – எதனை, அறிந்தவர்கள் அறிகிறார்களோ - என்று ப்ரஹ்மலோகத்தைக் கூறியது; இங்கு கூறப்பட்டவர்கள் நித்யஸூரிகள் ஆவார்கள். இந்த நித்யஸூரிகள் காண்பது வைஷ்ணவபதமே ஆகும்; இதனை ப்ர. (5-10) - தத் விஷ்ணோ; பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: - நித்யஸூரிகள் எப்போதும் அந்த விஷ்ணுவின் உயர்ந்த இடத்தைப் பார்த்தபடி உள்ளனர் - என்பதால் அறியலாம். இது போன்று, அந்தரிக்ஷத்திற்கு மேற்புறம் உள்ளது ப்ரஹ்மலோகம் அல்ல; காரணம் அந்த இடைவெளியில் ஸ்வர்கலோகம் போன்ற பலவும் உள்ளன.

ஆகவே ப்ர. (5-2) – ஏதத் வை ஸத்யகாம பரம் ச அபரம் ச ப்ரஹ்ம யத் ஓம்கார: தஸ்மாத் வித்வாந் ஏதேந ஏவ ஆயதநேந ஏகதரமந்வேதி - ஸத்யகாமனே! ஓம்காரம் என்று எது உண்டோ அதுவே பரம் மற்றும் அபரம் (உயர்ந்த, தாழ்ந்த) என்பதான ப்ரஹ்மமாகும். ஆகவே வித்வான் ஒருவன் இந்த ஓம்காரம் மூலமாகவே இந்த இரண்டில் ஒன்றை அடைகிறான் - என்று கூறப்பட்ட வாக்கியத்தில் உள்ள கார்யப்பொருளான தாழ்ந்த ப்ரஹ்மம் என்பது இரண்டு வகைப்பட்டது; ஒன்று இந்த உலகத்தைச் சார்ந்தது, ஒன்று அந்த உலகத்தைச் சார்ந்தது; யார் ஒருவன் ஒரு

மாத்திரை கொண்டதாக ஓம் என்பதை உபாஸிக்கிறானோ அவன் மனிதலோகத்தில் நல்ல பயன்களைப் பெறுகிறான்; இரண்டு மாத்திரை கொண்டதாக ஓம் என்பதை உபாஸிப்பவன் அந்தரிக்ஷலோகத்தில் நல்ல பயன்களை அடைகிறான்; மூன்று மாத்திரைகள் கொண்டதாக ஓம் என்பதை உபாஸிப்பவன் பரமபுருஷனையே த்யானிப்பதால், பரப்ரஹ்மத்தையே பலனாக அடைகிறான் என்று கூறப்பட்டதால், நம்முடைய கருத்துக்கள் அனைத்தும் பொருந்துகின்றன. ஆகவே காண்பவனாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான்.

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 256)

## பரமைகாந்திகள் அல்லாதவர்கள் செய்யும் கைங்கர்யம்

(1) ஸாக்ஷாத் லக்ஷ்மீபதௌ ஏவ க்ருதம் கைங்கர்யம் அஞ்ஜஸா
ஸார கல்க விபாகேந த்விதா ஸாத்பி: உதீர்யதே
(2) க்ருதக்ருத்யஸ்ய கைங்கர்யம் யத் அநந்ய ப்ரயோஜநம்
குர்வாதி ரக்ஷணார்தம் வா தத் ஸாரம் ஸம்ப்ரசக்ஷதே
(3) டம்பார்த்தம் பரபீடார்த்தம் தந்நிரோதார்த்தம் ஏவ வா
ப்ரயோஜநா அந்தரார்த்தம் வா கைங்கர்யம் கல்க இஷ்யதே

பரமைகாந்திகளல்லாதார் பண்ணும் கைங்கர்யத்தை ஸர்வேச்வரன் திருவடிகளாலே கைக்கொள்ளுமென்னுமிடத்தையும், பரமைகாந்திகள் பண்ணும் கைங்கர்யத்தைத் திருமுடியாலே கைக்கொள்ளுமென்னுமிடத்தையும் “தத் ஸர்வம் தேவதேவஸ்ய சரணாவுபதிஷ்டதே” என்றும், “யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்த கத புத்திபி: தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணந்தி வை ஸ்வயம்” என்றும் ஸ்ரீவேதவ்யாஸ பகவான் அருளிச்செய்தான்.

**விளக்கம்** – (1) மஹாலக்ஷ்மியின் நாயகனிடம் செய்யப்பட்ட கைங்கர்யங்கள் அனைத்தும் ஸாரம் மற்றும் சக்கை என்னும் இருவிதமாக உள்ளதாக ஸாதுக்களால் கூறப்படுகிறது. (2) எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் உள்ளவைகள் மற்றும் ஆசார்யன் போன்றவர்களைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படுபவைகள் முதலான கைங்கர்யங்களை ஸாரமாகக் கூறுகிறார்கள். (3) டம்பம், மற்றவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்குதல், மற்றவர்களைக் கைங்கர்யம்

செய்யவிடாமல் தடுத்தல், மற்ற பலன்கள் ஆகியவற்றுக்காகச் செய்யப்படும் கைங்கர்யங்களை சக்கை என்று கூறுகிறார்கள். பரமைகாந்திகள் அல்லாதவர்களால் செய்யப்படும் கைங்கர்யங்களைப் பகவான் தனது திருவடிகளால் ஏற்கிறான் என்றும், பரமைகாந்திகளால் செய்யப்படும் கைங்கர்யங்களைப் பகவான் தனது திருமுடியால் ஏற்கிறான் என்றும் வ்யாஸபகவான் அருளிச்செய்தார்; மஹாபாரதம் சாந்திபர்வம் (353-63, 64) - தத் ஸர்வம் தேவதேவஸ்ய சரணாவுபதிஷ்டதே – தேவர்களுக்கு அளிக்கப்பட்ட அவிர்பாகமானது பகவானின் திருவடித்தாமரையில் சேர்கிறது; யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்த கத புத்திபி: தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணந்தி வை ஸ்வயம் – பரமைகாந்திகளால் செய்யப்படும் கர்மங்களை பகவான் தானே தனது திருமுடியால் ஏற்கிறான்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 76(

**வ்யாக்யானம் -** தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தமாக வவதரித்தருளின க்ருஷ்ணன். “அஸ்த்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலம், பார்த்தம் ப்ரபந்நமுத்திச்ய சஸ்த்ராவதரணம் க்ருதம்” என்கிறபடியே, அஸ்த்தாநேயுண்டான பந்து ஸ்நேஹ காருண்யங்களாலும், ஸ்வதர்மத்தில் அதர்ம புத்தியாலும் கலங்கி, “நயோத்ஸ்யாமி” என்று யுத்தாந் நிவ்ருத்தனாய், “யச் ச்ரேயஸ் ஸ்யாந் நிச்சித ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்” என்ற வர்ஜுனனைத் தெளிவித்து யுத்தே ப்ரவ்ருத்தனாக்குகை வ்யாஜமாக, “அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய” என்கிறபடியே லோகத்துக்கு உஜ்ஜீவந சாஸ்த்ரமாம்படி எல்லாப் பொருளும் விரித்த ஸ்ரீகீதையில், (தத்வவிவேக) ப்ரதமத்திலே, தேஹாத்மாபிமாந கார்யமான பந்து ஸ்நேஹத்தையும் வத பீதியையும் மாற்றுகைக்காக தத்வஜ்ஞாநத்தை யுபதேசிக்கத் தொடங்கின வளவிலே, “ந த்வே வாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா: ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்” என்று ஸர்வேச்வரனான தன்னோபாதி ஸகலாத்மாக்களும் நித்யரென் றருளிச்செய்கிற வழியாலே, ஜீவபர பேதம், ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதமாகிற விவற்றை தர்சிப்பித்து, “தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா, ததா தேஹாந்தர ப்ராப்தி: தீரஸ் தத்ர நமுஹ்யதி” இத்யாதியாலே ப்ரக்ருத்யாத்ம விவேகத்தையும் சொல்லுகையாலே தத்வங்களினுடைய விவேகத்தையும் … இவரும் “அடியேனுள்ளான்” என்கிறவிடத்திலே சாப்தமாகவும் ஆர்த்தமாகவும் ஜீவபர பேதமும், ஜீவர்களுக்கு பரஸ்பர பேதமும், “சென்று சென்று பரம்பரமாய்” என்று ஆத்மாவுக்கு தேஹாதி விலக்ஷணத்வத்தைச் சொல்லுகையாலே ப்ரக்ருத்யாத்ம விவேகமுமாகிற தத்வ விவேகத்தையும்,

**விளக்கம்** – (தத்வ விவேக) தர்மத்தை நன்றாக நிலைநிறுத்துவதற்காக அவதரித்த க்ருஷ்ணன். கீதார்த்த ஸங்க்ரஹம் (5) – அஸ்த்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலம், பார்த்தம் ப்ரபந்நமுத்திச்ய சஸ்த்ராவதரணம் க்ருதம் - வரச்கூடாத இடத்தில் ஏற்பட்டதான உறவினர்கள் மீது கொண்ட அன்பு, கருணை போன்றவற்றாலும், தனக்கே உரிய தர்மத்தை அதர்மம் என்று உணர்ந்ததாலும் கலங்கியபடி நின்று, தன்னைச் சரணம் புகுந்த அர்ஜுனனுக்காக இந்த கீதாசாஸ்த்ரம் தொடங்கப்பட்டது – என்று கூறுவதற்கு ஏற்ப, வரக்கூடாத இடத்தில் ஏற்பட்ட உறவினர் மீது அன்பு மற்றும் கருணை காரணமாகவும், தனது தர்மத்தை அதர்மம் என்று எண்ணியதாலும் கலங்கி, நயோத்ஸ்யாமி - என்பதற்கு ஏற்ப யுத்தம் செய்யவதில்லை என்று தீர்மானித்து கைவிட்டவனாய், கீதை (2-7) – யச் ச்ரேயஸ் ஸ்யாந் நிச்சித ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் - எனக்கு எது உயர்வை அளிக்கும் என்று நீ தீர்மானித்துள்ளாயோ, அதனை உனது சிஷ்யனாக உன்னைச் சரணடைந்து நிற்கும் எனக்கு உபதேசம் செய்வாயாக - என்று நின்ற அர்ஜுனனுடைய அறிவைத் தெளிய வைத்து, அவனை யுத்தத்தில் ஈடுபடுத்தும்விதமாகக் கூறுகின்ற உபதேசம் என்று ஒரு காரணத்தை ஏற்படுத்திக்கொண்டு, திருவாய்மொழி (4-8-6) - அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவர் அறிய – என்பதற்கு ஏற்ப "உலகில் உள்ள அனைவரும் கரையேறும் விதமாக அமைந்துள்ல ஒரு சாஸ்த்ரம்" என்று அனைத்துப் பொருள்களும் மிகவும் விரிவாக உரைக்கப்பட்ட ஸ்ரீமத்பகவத்கீதையின் தொடக்கத்தில், சரீரத்தையே ஆத்மா என்று எண்ணியதன் விளைவாக ஏற்பட்டதான உறவினர்கள் மீது உள்ள அன்பு மற்றும் கொல்வதில் உள்ள அச்சம் போன்றவற்றை மாற்றும்விதமாக தத்வஞானத்தை உபதேசிக்கத் தொடங்கும்போது, கீதை (2-12) – ந த்வே வாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா: ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் – இதற்கு முன்னால் உள்ள காலங்களில் நான் இல்லாமல் இல்லை, நீயும் இல்லாமல் இல்லை, இந்த அனைவரும் இல்லாமல் இல்லை; இனிவரும் காலங்களிலும் நாம் இல்லாமல் இருப்போம் என்பதும் இல்லை - என்று ஸர்வேச்வரனாகிய தன்னைப் போன்றே அனைத்து ஆத்மாக்களும் நித்யர்களே ஆவர் என்று அருளிச்செய்ததன் மூலம், ஜீவாத்மா மற்றும் பரமாத்மாவுக்கு இடையே உள்ள வேறுபாடு, ஒவ்வொரு

ஜீவாத்மாக்களிலும் உள்ள வேறுபாடு ஆகியவற்றை உபதேசித்தான். தொடர்ந்து கீதை (2-13) – தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா, ததா தேஹாந்தர ப்ராப்தி: தீரஸ் தத்ர நமுஹ்யதி – சரீரத்தில் உள்ள ஆத்மா எவ்வாறு சரீரத்தின் இயற்கையான இளமை, வாலிபம், வயோதிகம் ஆகியவற்றை அடைகிறதோ அது போன்றே வேறு ஒரு சரீரத்தையும் அடைகிறது; ஆகவே இதனைக் கண்டு தீரன் வருந்துவதில்லை - என்பது போன்றவை மூலம், சரீரமும் ஆத்மாவும் வெவ்வேறு என்பது உபதேசிக்கப்படுகிறது; இதன் மூலம் தத்வங்களை வேறுபடுத்திக் காண்கின்ற அறிவு ஏற்படுத்தப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும், திருவாய்மொழி (8-8-2) – அடியேன் உள்ளான் - என்ற பாசுரத்தில் உள்ள பதங்கள் மூலம் ஜீவாத்மா மற்றும் பரமாத்மாவிற்கு உள்ள பேதம், ஜீவாத்மாக்களில் ஒவ்வொருத்தருக்கும் இடையில் உள்ள பேதம் ஆகியவற்றையும், திருவாய்மொழி (8-8-5) – சென்று சென்று பரம்பரமாய் - என்பதன் மூலம் ஆத்மாவிற்கும் சரீரத்திற்கும் உள்ள வேறுபாட்டையும் கூறுவதால் தத்வங்களுக்கு இடையில் உள்ள வேறுபாட்டை உபதேசித்தார்.

**வ்யாக்யானம்** - (நித்யவாநித்யத்வ) "அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாச் சரீரிண அநாசிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத", "ந ஜாயதே ந ம்ரியதே வா கதாசித் நாயம் பூத்வா பவிதாவா நபூய: அஜோ நித்ய சாச்வதோயம் புராணோ நஹந்யதே ஹந்யமாநே சரீரே", "வாஸாம்ஸி ஜீர்ணாநியதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி, ததா சரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ" இத்யாதிகளாலே ஆத்மநித்யத்வ தேஹாநித்யத்வங்களையும் … (இவரும்) "மின்னின் னிலையில மன்னுயிராக்கைகள்" என்றும், "உள்ளது மில்லதும்" என்றும் சிதசித் தத்வங்களின் நித்யத்வாநித்யத்வங்களையும்,

**விளக்கம்** – ( நித்யத்வ அநித்யத்வ) – கீதையில் (2-18) - அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாச் சரீரிண அநாசிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத – நித்யமாகவும், அழிவற்றவனாகவும், அறிபவனாகவும் உள்ள ஆத்மாவின் இந்தச் சரீரங்கள் அனைத்துமே அழியக்கூடியவை என்றே கூறப்பட்டுள்ளது. ஆகவே நீ கலங்காமல் யுத்தம் செய்வாயாக – என்றும், கீதை (2-20) – ந ஜாயதே ந ம்ரியதே வா கதாசித் நாயம் பூத்வா பவிதாவா நபூய: அஜோ நித்ய சாச்வதோயம் புராணோ

நஹந்யதே ஹந்யமாநே சரீரே - இந்த ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை; முன்பு உண்டாகி, பின்பு இல்லாமல் போகப்போகிறான் என்பதும் இல்லை; இவன் பிறப்பற்றவன், நித்யமானவன், எப்போதும் உள்ளவன், பழமையானவன்; சரீரம் கொல்லப்பட்டாலும் ஆத்மா அழிவதில்லை - என்றும், கீதை (2-22) - வாஸாம்ஸி ஜீர்ணாநியதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி, ததா சரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ - மனிதன் கிழிந்த துணிகளைக் களைந்துவிட்டு புதிய துணிகளை எவ்விதம் அணிந்து கொள்கிறானோ அது போன்றே ஆத்மாவும் பழைய சரீரத்தை விட்டு புதிய சரீரத்தை எடுத்துக்கொள்கிறது - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம், ஆத்மாவின் நித்யத்தன்மை மற்றும் சரீரத்தின் அநித்யத்தன்மை கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-2-2) – மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள் – என்றும், திருவாய்மொழி (1-2-8) – உள்ளதும் இல்லதும் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், சேதநத்தின் நித்யத்வம் மற்றும் அசேதநத்தின் அநித்யத்வம் ஆகியவற்றை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (நியந்த்ருத்வ) “பூமிராபோநலோ வாயு: கம் மநோ புத்தி ரேவச, அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதி ரஷ்டதா”, “அப்ரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்” என்கிறபடியே சேதநாசேதந சரீரியாய்; “ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதி: ஜ்ஞாநம போஹநஞ்ச” என்றும், “ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுந திஷ்ட்டதி, ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா” என்றும் சொல்லுகிறபடியே ஸர்வ ஜநஹ்ருதி ஸ்த்தனாய் நின்று ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் பண்ணுவிக்கையாகிற ஈச்வரனுடைய நியந்த்ருத்வத்தையும், … (இவரும்) “உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்து” என்றும், “கரந்த சிலிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும் கரந்தெங்கும் பரந்து” என்றும் அந்த சேதநாசேதந சரீரியாய், “நின்றனர்” இத்யாதிப்படியே அவற்றின் ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் ஸ்வாதீநமாம்படியிருக்கிற வவனுடைய நியந்த்ருத்வத்தையும்,

**விளக்கம்** – (நியந்த்ருத்வ) – கீதை (7-4) - பூமிராபோநலோ வாயு: கம் மநோ புத்தி ரேவச, அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதி ரஷ்டதா – பூமி, நீர், அக்னி, வாயு,

ஆகாசம், மனம், புத்தி, அஹங்காரம் என்று என்னுடைய இந்த ப்ரக்ருதியானது எட்டுவிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது - என்றும், கீதை (7-5) - அப்ரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் – இப்படியாகப் பிரிக்கப்பட்டுள்ள இது "அபரா" என்னும் என்னுடைய ஜடப்ரக்ருதி ஆகும். இதனைக் காட்டிலும் வேறாக உள்ள எந்த ஒரு ப்ரக்ருதிய்னால் அனைத்தும் தாங்கப்பட்டுள்ளதோ அதுவே என்னுடைய ஜீவரூபமான "பரா" என்னும் ப்ரக்ருதி ஆகும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து சேதந அசேதநங்களையும் தனது சரீரமாகக் கொண்டவனாகவும்; கீதை (18-61) - ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுந திஷ்ட்டதி, ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா – சரீரம் என்னும் இயந்திரத்தில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள அனைத்து ஜீவாத்மாக்களையும், அவற்றின் அந்தர்யாமியாக உள்ள ஈச்வரன், தனது மாயை மூலம் அவரவர்களுடைய கர்மங்களுக்கு ஏற்ப சுழலும்படிச் செய்து, அவர்களுடைய இதயத்தில் நிற்கிறான் - என்றும், கீதை (15-15) - ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதி: ஜ்ஞாநம போஹநஞ்ச – நானே அனைத்து உயிர்களுடைய இதயத்தில் உள்ளேன். என்னிடமிருந்தே ஞாபகமும் மறதியும் ஏற்படுகின்றன - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து உயிர்களுடைய இதயத்தில் நின்று அவர்கள் தங்கள் செயல்களைச் செய்தல் மற்றும் செய்யாமல் இருத்தல் ஆகியவற்றை நியமித்தபடி உள்ள ஈச்வரனுடைய நியமிக்கும் தன்மையானது கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-1-7) – உடல்மிசை உயிர் எனக் கரந்தெங்கும் பரந்து - என்றும், திருவாய்மொழி (1-1-10) - கரந்த சிலிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும் கரந்தெங்கும் பரந்து – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், அனைத்து சேதந அசேதநங்களைச் சரீரமாகக்கொண்டவன் என்பதையும்; திருவாய்மொழி (1-1-6) – நின்றனர் - என்பதன் மூலம் அனைத்து பொருள்களுடைய செயல் புரிகின்ற நிலை, செயல் புரியாமல் உள்ல நிலை போன்றவை தன் வசப்பட்டவை என்பதாக இருக்கின்ற நியமிக்கும் தன்மையைக்கொண்டவன் என்பதையும் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – (ஸௌலப்ய) "தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந:" என்றும், "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்த்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்றும் பக்திமான்கள்

நிமித்தமாகவும் அவதார ப்ரயுக்தமாகவு முண்டான வவன் ஸௌலப்யத்தையும், ... (இவரும்) "பத்துடை யடியவர்க் கெளியவன்" என்றும், "பல பிறப்பாய் எளிவரு மியல்வினன்" என்றும் ஆசாலேசமுடையாரைப் பற்றவும் அவதார ப்ரயுக்தமாகவு முண்டான வவனுடைய ஸௌலப்யத்தையும்,

**விளக்கம்** – (ஸௌலப்ய) கீதையில் (8-14) - தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந: – எப்போதும் இடைவிடாமல் என்னுடன் இருக்கவேண்டும் என்ற ஆசை கொண்ட ஞானிக்கு நான் சுலபமாக அடையும்படி உள்ளேன் - என்றும், கீதை (4-8) - பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்த்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே - சாதுக்களைக் காப்பாற்றவும், தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப பக்தியில் நிலைநிற்பவர்கள் காரணமாகவும், தனது அவதாரம் காரணமாகவும் வெளிப்படுவதான எளிமைத்தன்மை கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும், திருவாய்மொழி (1-3-1) – பத்துடை அடியவர்க்கு எளியவன் - என்றும், திருவாய்மொழி (1-3-2) – பல பிறப்பாய் எளிவரும் இயல்வினன் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அவன் மீது சிறிதளவே ஆசை கொண்டிருந்தாலும் அவர்களைப் பற்றுவதற்காகவும், அவதாரம் காரணமாகவும் அவனுக்குள்ள எளிமையைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - (ஸாம்ய) "ஸமோஹம் ஸர்வபூதேஷு நமே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:" என்று அவனுடைய ஆச்ரயணீயத்வே ஸர்வஸாம்யத்தையும், ... (இவரும்) "முற்றவும் நின்றனன்" என்று அவனுடைய ஆச்ரயணீயத்வே ஸாம்யத்தையும். (அஹங்கார தோஷ) "அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமதி மந்யதே" என்று அஹங்கார தோஷத்தையும், ... (இவரும்) "நீர் நுமதென்றிவை வேர் முதல்மாய்த்து" என்று ஸம்ஸார ஹேது அதுவேயாகச் சொல்லுகையாலே அஹங்கார தோஷத்தையும்.

**விளக்கம்** - (ஸாம்ய) - கீதையில் (9-29) - ஸமோஹம் ஸர்வபூதேஷு நமே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: - அனைத்து உயிர்களிடமும் நான் சமமாகவே உள்ளேன்.

எனக்குப் பகைவரோ விருப்பமானவரோ என்று பேதம் இல்லை - என்று அவனை ஆராதிக்கும்விதத்தில் எந்த வேறுபாடும் இன்றியுள்ள நிலை கூறப்பட்டது. இதே போன்று நம்மாழ்வாரும் (1-2-6) – முற்றவும் நின்றனன் - என்பதன் மூலம் அவனைக் அண்டும் முறைகளில் அவன் அனைவருக்கும் சமமாகவே உள்ளதை அருளிச்செய்கிறார். (அஹங்கார தோஷம்) - கீதையில் (3-27) - அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமதி மந்யதே - அஹங்காரத்தால் மயக்கப்பட புத்தியைக் கொண்டவன், தானே இவற்றைச் செய்வதாக எண்ணுகிறான் - என்று அஹங்காரத்தினுடைய தோஷம் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-2-3) – நீர் நுமதென்றிவை வேர் முதல்மாய்த்து - என்பதன் மூலம் ஸம்ஸாரத்திற்கான காரணமாக அஹங்காரத்தை உரைப்பதால், அதன் தோஷத்தை அருளிச்செய்தார் என்றாகிறது.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 221)

3-7-4 உடையார்ந்த ஆடையன் கண்டிகையன் உடை நாணினன்
புடையார் பொன்னூலினன் பொன்முடியன் மற்றும் பல்கலன்
நடையாவுடைத் திருநாரணன் தொண்டர்தொண்டர் கண்டீர்
இடையார் பிறப்பிடைதோறு எமக்கெம் பெருமக்களே

**பொருள் –** இடுப்புடன் நன்றாகப் பொருந்திய பட்டாடை அணிந்தவனும், கழுத்தில் நேர்த்தியாக ஆபரணம் அணிந்துள்ளவனும், இடுப்பில் பரிவட்டத்தின் மீது சாற்றப்பட்ட அரைஞாண் கொண்டவனும், நேர்த்தியாக பொன்னால் ஆகிய பூணூலை அணிந்தவனும், காண்பதற்கு அழகான திருமுடியை அணிந்தவனும், மேலும் பலவிதமான ஆபரணங்களைத் தனது இயல்பாகவே கொண்டவனும் ஆகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு அடியவர்களாக உள்ளவர்களுக்கு அடியவர்களாக உள்ளவர்கள், எங்களுடைய அனைத்து பிறப்புகளிலும் நிரந்தரமாக எங்கள் எஜமானர்கள் ஆவார்கள்.

**அவதாரிகை -** அவனுடைய ஆபரண சோபையிலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு சேஷபூதரானவர்கள் எனக்கு ஸ்வாமிகள் என்கிறார்.

**விளக்கம் –** அவனுடைய ஆபரணத்தின் அழகில் தோற்று நிற்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கைங்கர்யம் செய்பவர்கள் எனக்கு எஜமானர்கள் என்கிறார்.

**வ்யாக்யானம்** - (உடையார்ந்த ஆடையன்) திருவரை பூத்தாற்போலேயிருக்கை. "கௌசேய புஷ்பித கடீதடம்", "பீதாம்பரதர:", "தாஸாமாவிரபூத்" ஶ்ரீப்ருந்தாவநத்திலே உலாவா நிற்கச்செய்தே, அவர்கள்படும் அலமாப்புக் காண்கைக்காக மறையநின்றான்; "இனி இவர்கள் தரிக்கமாட்டார்கள்" என்று தோற்றினவாறே வந்து தோற்றினான். "தாஸாம்" கமர் பிளந்தவிடத்தே ஒரு பாட்டம் மழைவிழுந்தாற்போலே யிருக்கை. "ஸ்மயமாந முகாம்புஜ:" தன்னையொழியச் செல்லாமையுண்டானால், பின்பு அவன் முகமிருக்கும்படி இதுபோலே காணும். "பீதாம்பரதர:" இவன்பக்கல் இடைப்பெண்கள் நெஞ்சிற் பிறந்த ப்ரணய ரோஷத்தாலுள்ள மறமெல்லாம் ஆறும்படியாயிற்று உடைவாய்ப்பு இருப்பது. நெஞ்சுகளிற் பிறந்து புண்ணெல்லாம் தீர்ந்து இத்தோடே பணிபோரும்படியாயிற்று இருப்பது. "படிச்சோதி யாடையோடும் பல்கலனாய் நின் பைம்பொற் கடிச்சேதி கலந்ததுவோ" என்று இதுவே பணிபோந்திருக்குமிறே. "ஸாக்ஷாந் மந்மத மந்மத:" – "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிறபடியே.

**விளக்கம்** – (உடையார்ந்த ஆடையன்) - உடை என்றால் இடுப்பு. அதில் நன்றாகப் பொருந்திய பட்டாடை. அதாவது இடுப்பு பூத்தது போன்று காணப்படும் நிலை. இங்கு ஸ்ரீமத்பாகவதத்தில் உள்ள ஒரு ச்லோகமானது வ்யாக்யானம் செய்யப்படுகிறது. அந்த ச்லோகம் (10-32-2) – தாஸாம் ஆவிரபூத் சௌரி: ஸ்மயமாந முகாம்புஜ: பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாந் மந்மத மந்மத: - மன்மதனுடைய மனதையும் மயக்கவல்ல க்ருஷ்ணன், பீதாம்பரம் உடுத்திக்கொண்டு, வனமாலை அணிந்து, தாமரை போன்று திருமுகத்தில் புன்சிரிப்புடன் கோபிகைகள் முன்பாகத் தோன்றினான் - என்பதாகும். (தாஸாம் ஆவிரபூத்) - ப்ருந்தாவனத்தில் உலவியபடி இருந்தபோதும், தன்னை இழந்தால் அவர்கள் அடைகின்ற துடிப்பைக் காணவேண்டும் என்ற ஆசையால் மறைவாக நின்றான். ஆனால் இனியும் இவர்கள் தாங்கமாட்டார்கள் என்ற நிலை வந்தபோது அவர்கள் முன்பாக வந்து நின்றான். (தாஸாம்) - வறட்சியால் பிளவுபட்டு துக்கத்தில் உள்ள நிலத்தில் நல்ல மழை பொழிந்தது போன்று வந்தான். (ஸ்மயமாந முகாம்புஜ:) – தன்னைத் தவிர்த்து வேறு யாரிடமும் செல்வதில்லை என்னும்போது, அவனுடைய திருமுகம் இவ்விதமே மலர்ந்து காணப்படும். (பீதாம்பரதர) -

இவ்விதம் இவன் மறைந்த காரணத்தால் இவன் மீது கோபிகைகளுக்கு ஏற்பட்ட ப்ரணய கோபம் அனைத்தும் மாறும்படியாக பட்டாடை உள்ளது. மனதில் ஏற்பட்ட புண் அனைத்தும் ஆறும்படியாக, இத்துடன் இந்த நோய் விலகும்படியாக உள்ள பட்டாடை. திருவாய்மொழி (3-1-1) - படிச்சோதி யாடையோடும் பல்கலனாய் நின் பைம்பொற் கடிச்சேதி கலந்ததுவோ – என்பது காண்க. (ஸாக்ஷாத் மந்மத மந்மத:) - இராமாயணம் அயோத்யாகாண்டம் – பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் - ஆண்களின் கண்களையும் மனதையும் அபகரிக்கும் அழகு கொண்ட இராமன் - என்னும்படியாக உள்ள க்ருஷ்ணன்.

**வ்யாக்யானம்** - (கண்டிகையன்) கூறையுடையழகு மேலே எழவீசிப் போகாநிற்க, நடுவே வழிபறித்துக்கொள்ளும் திருக்கழுத்தில் ஆபரணம், இவரை மடி பிடித்துக் கொண்டு போய்க் கழுத்தளவு ஸௌந்தர்யத்திலே நிறுத்திற்று. மடியென்பது – புடைவை. கண்டிகை - ஆரம்; கண்டத்திலே சாத்துமவை. (உடைநாணினன்) அரைநூல் வடம். கழுத்தே கட்டளையாக அநுபவியாநிற்க, கண்ட கதமான ஸௌந்தர்ய தரங்கங்கள் கீழே போரவீச, நடுவே நின்று அநுபவிக்கிறார். (புடையார் பொன்னூலினன்) தான் கிடந்த பக்கத்துக்கு வேறொரு ஆபரணம் வேண்டாதே, காளமேகத்திலே மின்னினாற்போலேயிருக்கிற திருயஜ்ஞோபவீதத்தை யுடையவன். இந்த ஸௌந்தர்ய ஸாகரத்தின் நடுவே அலையப் புக்கவாறே, தமக்கு ஆலம்பநமாக ஒரு நூலைப் பற்றினார் காணும்!

**விளக்கம்** – (கண்டிகையன்) - ஆனால் இடுப்பில் அணிந்துள்ள பட்டு வஸ்த்ரத்தை அனுபவிப்பதை நிறுத்திவிட்டு, மற்ற ஆபரணங்களை அனுபவிக்கத் தொடங்கியது ஏன்? அந்தப் பட்டு வஸ்த்ரத்தின் அனுபவம் என்பது முடிந்துவிட்டதோ என்று கேட்கலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறர். இடுப்பில் அணிந்திருந்த ஆடையின் அழகு இவரை மேல்நோக்கிக் கொண்டு செல்ல, நடுவில் இருவருடைய சித்தத்தை இவன் கழுத்தில் இருந்த ஆபரணமானது வழிப்பறி செய்தது. இவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்று, கழுத்தில் காணப்படும் அழகில் நிறுத்தியது. (உடைநாணினன்) - அரைஞாண் கயிறு. கழுத்தையும், அதில் உள்ள ஆபரணங்களையும் அனுபவித்தபடி இருந்தவர், திடீரென கீழே இறங்கி வந்து அரைஞாண் கயிற்றை ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்.

கழுத்தை அனுபவித்தபடி இருந்தவரை, நடுவிலிருந்து எழுந்த அழகு என்னும் அலைகள் தள்ள, இடைப்பாகத்திற்கு வந்து அனுபவிக்கிறார். (புடையார் பொன்னூலினன்) - இவன் அணிந்துள்ள பூணூலானது, தான் உள்ள இடத்திற்கு அருகே வேறு எந்த ஒரு ஆபரணமும் அவசியம் இல்லை என்று கூறுவது போன்றும், மழை மேகத்தில் ஏற்படும் மின்னல் போன்றும் உள்ள திருப்பூணூலை உடையவன். இவ்விதமாக இந்த அழகு என்ற கடலில் சிக்கிக்கொண்டு, அதன் அலைகளால் அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்பட்டவர், தனக்குப் பிடித்துக் கொள்வதற்கு ஏற்றபடி ஒரு நூலைப் பற்றிக் கொண்டார்; இங்கு நூல் என்பது பூணூல் மற்றும் சாஸ்த்ரம் என்று இரண்டு பொருள் தருவதாகும்.

**வ்யாக்யானம்** - (பொன்முடியன்) "தேர்கடவிய பெருமான்" என்கிறபடியே, ஆச்ரிதர்க்கு ஆட்செய்கைக்கு முடிகவித்திருக்கிறவன். ஒரு நூலைப் பற்றி நின்றவர்களை அதுதானே ஒருதலை சேர்த்து விடுகை நிச்சிதமிறே. பொன்முடி - ஸ்ப்ருஹணீயமான முடி. (மற்றும் பல்கலன் நடையாவுடை) வேறு எண்ணிறந்த திருவாபரணங்களை ஸ்வாபாவிகமாக வுடையவன். ஒருதலை சேர்ந்தால் பின்னை எல்லாம் வேண்டினபடி அநுபவிக்கலாமிறே. (மற்றும் பல்கலன்) மின்மினி பறவாநின்றது காணும். அபரிமிதமாகையாலே முடியச் சொல்லமாட்டார்; ஆசையாலே சொல்லாதொழியமாட்டார்: இதிறே படுகிற பாடு!

**விளக்கம்** – (பொன்முடியன்) – திருவாய்மொழி (3-6-10) - தேர்கடவிய பெருமான் - என்பதற்கு ஏற்ப அடியார்களைத் தன்வசப்படுத்தி அவர்களைத் தனது கைங்கர்யத்தில் ஈடுபடுத்துவதற்காக நீண்ட திருமுடி கொண்டவன். ஒரு நூலைப் பற்றி நிற்பவர்களை அந்த நூலானது கரையில் கொண்டு சேர்த்துவிடும் அல்லவோ? பொன்முடி என்றால் காண்பதற்கு அழகான முடி. (மற்றும் பல்கலன் நடையாவுடை) - நடை என்றால் இயற்கையாக அல்லது ஸ்வபாவமாக என்று பொருள். மேலும் பல எண்ணற்ற ஆபரணங்களை இயற்கையாகவே கொண்டவன். இப்படிப்பட்ட ஸம்ஸாரம் என்னும் கடலில் தத்தளித்தால் அங்கு உள்ள ஒரு ஓடத்தில் ஏறியுள்ள ஒருவன், ஒரு சாஸ்த்ரத்தைப் பிடித்தபடி கரை ஏறிய பின்னர் வேண்டிய இன்பம் அனைத்தையும் அனுபவிக்கலாம் அல்லவோ? (மற்றும் பல்கலன்) – "மற்றும்" என்று ஒரு பொதுப்பதம் கூறுவது ஏன்? இத்தனை

ஆபரணங்களை அனுபவித்ததன் காரணமாகக் கண்களில் மின்மினிப்பூச்சிகள் போன்று மயக்கம் ஏற்படுவதால், இவ்விதம் கூறினார். எண்ணற்றதாக இருப்பதால் அனைத்தையும் உரைக்கமாட்டார்; ஆசை காரணமாக உரைக்காமலும் இருக்கமாட்டார். இதுவே இவருடைய நிலைகொள்ளாத நிலையாக உள்ளது.

**வ்யாக்யானம்** - (திருநாரணன்) அவ்வாபரணங்களோபாதிகாணும் லக்ஷ்மீ ஸம்பந்தமும் அங்குத்தைக்கு. "மார்வத்து மாலை" என்னக்கடவதிறே. திருவாபரணாழ்வார்களாகிறார் நித்ய ஸித்த புருஷர்களாகையாலே இவர்களையுடையவன் திருநாரணன் என்கையாலே, இம்மிதுநமே ஜகத்துக்கு சேஷி என்கிறார். (தொண்டர் தொண்டர் கண்டீர்) சேஷித்வத்திலும் எல்லையாயிருக்கிறவர்கள். (இடையார் இத்யாதி) உச்சிவீடும் விடாதே நடுநெருங்கி வருகிற ஜந்மங்களில் அவகாசந்தோறும், ஓர் ஒப்பனையாலன்றிக்கே வெறும்புறத்திலே நமக்கு சேஷிகள். ஸ்ரீமானான நாராயணனுக்கு அடிமை புக்கிருப்பார்க்கு, "இச்சேர்த்தியறிந்து இவர்கள் ஆச்ரயிப்பதே!" என்று (இவர்களுக்கு) அடிமைபுக்கார்க்கு அடியேன் என்கிறார். இவர்கள் தங்களை எண்ணாதேயிருந்தபோதும் நமக்கு ஸ்வாமிகள் என்கிறார். எங்களுக்கு அஸாதாரண சேஷிகள்.

**விளக்கம்** – (திருநாரணன்) - ஆபரணங்கள் குறித்து உரைக்கும்போது மஹாலக்ஷ்மியின் தொடர்பை ஏன் கூறினார்? அந்த ஆபரண ஸம்பந்தம் போன்றே மஹாலக்ஷ்மியின் சம்பந்தம் உள்ளது. இவ்விதம் மஹாலக்ஷ்மியையும் ஆபரணமான உரைப்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; திருவாய்மொழி (10-10-2) - திருமார்வத்து மாலை நங்கை - என்கிறார். "திரு" என்ற சொல்லை ஆபரணத்தின் வரிசையில் சேர்த்து மேலே உரைத்தார். இனி அந்தப் பதத்தை, எஜமானத்தன்மையை வெளிப்படுத்தும் விதமாக உரைக்கிறார். திருவாபரண ஆழ்வார்கள் அனைவரும் எப்போது உள்ளவர்கள் என்பதால், அவர்களைக் கொண்டவன் திருநாரணன் என்று கூறுவதால், இந்த ஜகத்திற்கு எஜமானர்கள் இந்த ஜோடியே ஆவார்கள் என்று கருத்து. (தொண்டர் தொண்டர் கண்டீர்) – எஜமானத் தன்மைக்கு எல்லையாக அவர்கள் இருவரும் உள்ளது போன்று, அடிமைத்தன்மைக்கு எல்லையாக உள்ளவர்கள். (இடையார் இத்யாதி) - இடை

என்றால் நடுப்பகுதி. பரமபதத்தையும் மறக்காமல், நடுவில் ஏற்படுகின்ற ஒவ்வொரு பிறவியிலும், அவற்றில் உள்ள ஒவ்வொரு நொடியிலும், அவனைப் போன்று அழகைக் காண்பித்து அதன் மூலம் நமக்கு எஜமானர்கள் என்று இல்லாமல், தங்களுடைய செயல்களால் நமக்கு எஜமானர்களாக உள்ளவர்கள். மஹாலக்ஷ்மியைக் கொண்டுள்ள நாராயணனிடம் அடிமையாக உள்ளவர்களைக் கண்டு, "இந்த இருவருமாக உள்ள சேர்த்தி அழகைக் கண்டு இவர்கள் பற்றியபடி உள்ளனரே" என்று கொண்டாடி, "அவர்களுக்கு அடிமையாக உள்ளவர்களுக்கு நான் அடிமை", என்கிறார். "அவர்கள் எங்களை அடிமை என்று எண்ணவில்லை என்றாலும், அவர்கள் எங்களுக்கு எஜமானர்கள் ஆவர்", என்று கூறுகிறார். எங்களுக்கு மட்டுமே உரிய ஸ்வாமிகள் ஆவார்கள்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த

# இராமாநுச நூற்றந்தாதி

இதற்கு ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த வ்யாக்யானம் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 83)

78. கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளம் கழற்றி கருதரிய
வருத்தத்தினால் மிக வஞ்சித்து நீயிந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்கிய பின் என் நெஞ்சில்
பொருத்தப்படாது எம் இராமானுச மற்றோர் பொய்ப்பொருளே

**விளக்கவுரை** - "இவனது (எனது) உள்ளத்தைத் திருத்தி, அரங்கனின் பணியில் இவனை ஈடுபடுத்தவேண்டும்", என்று நீவிர் (எம்பெருமானார்) உமது மனதில் எண்ணி, எனது மனதில் புகுந்தீர். வீட்டில் குடி புகுந்த பின்னர், அங்குள்ள செடிகள் போன்றவற்றை நீக்குவது போன்று, அஜ்ஞானம் காரணமாக ஏற்பட்ட விபரீதமான எண்ணங்கள் முழுவதையும் நீவிர் அகற்றினீர். ஆத்மா என்னுடையது என்று எண்ணிய எனது கள்ளத்தன்மையை போக்கினீர். வேறு யாரும் என்னைக் குறித்து நெஞ்சத்தாலும் நினைக்கதபோது நீவீர் உமது உள்ளத்தில், "இவன் இப்படி அழிகிறானே" என்று வருந்தி, எனது விருப்பத்தின்படி நடப்பது போன்று நடித்து, நான் அறியாமலேயே என்னைத் திருத்திவிட்டீர். "இருள்தருமாஞாலம்" என்று உள்ள இந்த மண்ணில், ஸம்ஸாரியாக உலக விஷயங்களில் கிடந்த என்னைத் திருத்தினீர். அதன் பின்னர் எனக்கு எஜமானன் திருவரங்கனே ஆவான் என்று உணர்த்தி, எனக்கு ஞானம் அளித்த அவனுக்கு எனது உயிரையே எழுதிக் கொடுக்கும்படிச் செய்துவிட்டீர். எம்பெருமானாரே! இவ்விதம் படாதபாடு பட்டு நீவீர் திருத்திய எனது மனமானது, நீவிர் அறிவித்த மெய்யான தத்துவமான திருவரங்கனை விடுத்து, மற்றொரு பொய்யான பொருளில் என்றும் நாடாது. ஒளி

உள்ள இடத்தில் இருள் புகாது போன்று, ஞானம் ஏற்பட்ட பின்னர் அஜ்ஞானம் எப்போதும் தலைகாட்டாது அல்லவோ?

**அவதாரிகை -** கீழ்ப்பாட்டிலே லோகத்தையெல்லாம் ப்ரமித்தழித்த குத்ருஷ்டிகளை ப்ரபல ப்ரமாணங்களாலே நிரஸித்து தம்முடைய பாபங்களையெல்லாம் போக்கி, இன்னும் அதுக்கு மேலே சிறிது கொடுக்கவேணுமென்று நினைத்திருந்தாரென்று எம்பெருமானார் செய்த உபகார பரம்பரையை அடைவே அநுஸந்தித்து, இதிலே - தரிசு கிடந்த தரையைச் செய்காலாம்படி திருத்தும் விரகரைப்போலே இவ்வளவும் விஷயாந்தர ப்ரவணனாய்ப் போந்த வென்னைத் திருத்துகைக்காக படாதனபட்டு அரியன செய்து திருத்தி, தேவரீருக்கு வகுத்த விஷயமான ஸ்ரீய:பதிக் காளாம்படி பண்ணியருளின பின்பு வேறே சில அயதார்த்தங்கள் என்னுடைய மநஸ்ஸிலே வலியப் பொருத்திலும் பொருந்தாதே யிருப்பன வென்கிறார்.

**விளக்கம் –** கடந்த பாசுரத்தில், இந்த லோகங்கள் அனைத்தையும் மயக்கத்தில் ஆழ்த்தி அவர்களை அழித்தவர்களாகிய வேதத்திற்கும் புறம்பான பொருள் உரைக்கும் மற்ற மதத்தினரை, சரியான ப்ரமாணங்கள் மூலம் தள்ளினார் என்றும், திருவரங்கத்தமுதனராகிய தனது பாபங்கள் அனைத்தையும் போக்கினார் என்றும், அதற்கும் மேலே சிலவற்றை அளிக்கவேண்டும் என்று எண்ணியபடி இருந்தார் என்றும், இப்படியாக எம்பெருமானார் செய்தருளிய பல்வேறு உபகாரங்களை முழுவதுமாக எண்ணியபடி இருந்தார். இந்தப் பாசுரத்தில், “தரிசாகக் கிடந்த நிலத்தைப் பயிர் செய்வதற்கு ஏற்றபடி மாற்றுபவர் போன்று, இந்தனை காலமாக உலகவிஷயங்களின் பின்னே சென்ற என்னைத் திருத்துவதற்காக, பலவிதமான கடினமான முயற்சிகளைச் செய்து என்னைத் திருத்தி, உமக்கு இயல்பாகவே எஜமானனாக உள்ளவனும் மஹாலக்ஷ்மியின் நாயகனும் ஆகிய ஸர்வேச்வரனுக்கு மட்டுமே நான் அடிமை என்று என்னை மாற்றினீர். இதன் விளைவாக எனது மனதில் மற்ற விஷயங்கள் ஏதும் வந்து நிலைக்காது”, என்கிறார்.

**வ்யாக்யானம் –** (கருத்தில் புகுந்துள்ளில் கள்ளங் கழற்றி) “தேஷாமேவ அநுகம்பார்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம: நாசயாம்யாத்ம பாவஸ்தோ ஜ்ஞாந

தீபேந பாஸ்வதா” என்றும், “என்னைத் தீ மனங்கெடுத்தாய்” என்றும் சொல்லுகிறபடியே நெடுங்கை நீட்டாகவிருக்கில் இவன் நெஞ்சைத் திருத்தப் பணிப்படுமென்று கொண்டு, நெஞ்சு தன்னிலே தானே வந்து புகுந்து, குடியிருக்கிறவர்கள் அங்கிருக்கிற செடிகளை யறுக்குமாப்போலே, உள்ளிலுண்டான அஜ்ஞாநாந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாந ரூபமான தோஷங்களையெல்லாம் வாஸனையோடே துடைத்து, “கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேண ஆத்ம அபஹாரிணா” என்னும்படியான ஆத்மாபஹாராதி தோஷங்களைக் கட்டடங்கப் போக்கி யென்றபடி. “கருத்து” என்று மநோ வ்ருத்தி வாசியான சப்தத்தாலே, ப்ரகரணாநுகுண்யத்துக்காக மநஸ்ஸைச் சொல்லுகிறது. “சிந்தை” என்னுமாப்போலே.

**விளக்கம்** – (கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளங் கழற்றி) கீதை (10-11) – தேஷாமேவ அநுகம்பார்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம: நாசயாம்யாத்ம பாவஸ்தோ ஜ்ஞாந தீபேந பாஸ்வதா – அவர்களுக்கு க்ருபை செய்வதற்காக, அவர்களுடைய உள்ளத்தில் நான் நிலையாக நின்று, அஜ்ஞானத்தால் உண்டான இருளை, சரியான ஞானம் என்னும் விளக்கு கொண்டு நான் அழிக்கிறேன் – என்றும், திருவாய்மொழி (2-7-8) – என்னைத் தீமனம் கெடுத்தாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, “நாம் இவனைத் திருத்துவதற்காக மிகவும் அரிய முயற்சிகள் எடுக்கவில்லையென்றால், இவனுடைய மனதை எளிதாகத் திருத்த இயலாது”, என்று எண்ணியவராக, எனது மனதில் வந்து புகுந்தார். ஒரு புதிய இடத்தில் குடியேறுபவர்கள் அங்குள்ள செடிகள் போன்றவற்றை அகற்றுவது போன்று, எனது மனதில் ஏற்பட்டுள்ள அறியாமை, ஒன்றை மற்றொன்றாக அறிதல், தவறாக அறிதல் போன்ற தோஷங்கள் அனைத்தும் அவற்றின் வாசனையுடன் விலகும்படிச் செய்தார். மஹாபாரதம் ஆதிபர்வம் – கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேண ஆத்ம அபஹாரிணா – ஆத்மாவைத் திருடும் இது போன்றவனால் எந்தப் பாவம் தான் செய்யப்படவில்லை – என்பதற்கு ஏற்ப, பகவானுக்குச் சொந்தமான ஆத்மாவை நம்முடையது என்று அபகரிக்கும் தோஷங்கள் அனைத்தையும் விலக்கினார். “கருத்து” என்று சொல் மூலம் மனம் கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** – (கருதரிய வருத்தத்தினால்) வேறு சிலர்க்கு நெஞ்சால் நினைக்கவுங்கூட அரிதாயிருந்துள்ள வருத்தத்தாலே. வருத்தம் – ப்ரயாஸம். (மிக வஞ்சித்து) நான் அறியில் செய்த க்ருஷி தன்னையும் அழித்துக் கொள்வனென்று, இராமட மூட்டுவாரைப்போலே, எனக்கு ஒன்றுந் தெரியாதபடி மிகவும் மறைத்து. (நீ இந்த மண்ணகத்தே திருத்தி) தேவரீர் தாம் அறிந்ததாக யத்நித்து, இவ்வளவும் நித்ய ஸம்ஸாரியாய் விஷயாந்தரங்களிலே மண்டி விமுகனாய்க் கொண்டு, “இருள் தருமா ஞால”த்திலே ஸ்வைரமாக அபத ப்ரவ்ருத்தனாய்ப் போந்தேனாகையாலே கருந்தரையான என்னை, “செயல் நன்றாகத் திருத்தி”. “தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே” என்கிறபடியே ஒரு அதிகாரத்தைப் பார்த்து திருத்துகையன்றிக்கே, நிர்ஹேதுகமாகத் திருத்தினாயென்றபடி. திருத்துகையாவது - இவ்வாத்ம வஸ்து, சேஷியான ஸ்ரீய:பதிக்கு சேஷமென்னும் இவ்வர்த்தத்தை நெஞ்சிலே படும்படி உபதேசிக்கை.

**விளக்கம்** – (கருதரிய வருத்தத்தினால்) - மற்றவர்களால் மனதில் எண்ணுவதற்குக் கூட இயலாதபடி உள்ளதான கடினமான முயற்சிகள் மூலம். வருத்தம் என்றால் இங்கு பெருமுயற்சி என்று பொருள். (மிக வஞ்சித்து) - நான் அறிந்து கொண்டே செய்த பாபங்களைக்கூட, ஓடிப்போன மகன் ஒருவனுக்கு யாரும் அறியாமல் இரவு நேரத்தில் சத்திரம் ஒன்றில் வைத்து உணவு அளிக்கும் தாய் போன்று, நான் அறியாதவிதத்தில் மறைத்து. (நீ இந்த மண்ணகத்தே திருத்தி) - இந்தனை காலமாக நித்யஸம்ஸாரியாக இருந்தபடி, மற்ற விஷயங்களில் எப்போதும் ஈடுபட்டு, அதில் மட்டுமே ஆசை கொண்டாவனாக, திருவாய்மொழி (10-6-1) – இருள் தரு மா ஞாலம் – என்பதற்கு ஏற்ப உள்ள இந்த உலகில், எனது விருப்பத்தின்படி, தகாத செயல்களில் ஈடுபட்டுத் திரிந்தபடி இருந்தேன். இதனால் தாழ்ந்த நிலமாக இருந்த என்னை கண்ணிநுண்சிறுத்தாம்பு - செயல் நன்றாகத் திருத்தி – என்பதற்கு ஏற்ப திருத்தினார். கீதை (10-10) – தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே – த்யானம் போன்றவற்றால் எப்போதும் என்னிடம் ஈடுபட்டு, என்னை அன்புடன் வணங்குபவர்களுக்கு, எத்தகைய புத்தியோகத்தால் எவர்கள் என்னை அடைகிறார்களோ அந்தப் புத்தியோகத்தை நான் அளிக்கிறேன் - என்பதற்கு ஏற்ப என்னிடம் ஏதேனும் தகுதி

உள்ளதா என்று ஆராயாமல், எந்தவிதமான காரணமும் இன்றி என்னைத் திருத்தினார். திருத்துதல் என்றால் “இந்த ஆத்மாவானது எஜமானனாக உள்ளவனும், மஹாலக்ஷ்மியின் நாயகனும் ஆகிய ஸர்வேசரனுக்கே அடிமை” என்ற கருத்தானது, மனதில் நிலை நிற்கும்படிச் செய்தல் ஆகும்.

**வ்யாக்யானம்** – (திருமகள் கேள்வனுக்காக்கிய பின்) “நலமந்தமில்லதோர் நாடு” புகுந்த பின்பு வரக் கடவதான இந்த சேஷத்வ ஜ்ஞாநத்தை, இந்த மண்ணகத்தே எனக்கு உபகரித்து, தத் பலமாகக் கொண்டு, “பூமகளார் தனிக்கேள்வன்” என்கிறபடியே ஸ்ரீதேவியாகிற பெரியபிராட்டியாருக்கு வல்லபனான ஸர்வேச்வரனுக்கு அந்தப்புர விநியோகத்துக்கு ஆளாம்படி பண்ணின பின்பு. எனக்கு ஜ்ஞாநத்தைப் பிறப்பித்தவனுக்கு என்னுயிரை அறவிலை செய்து எழுதிக் கொடுத்த பின்பு. “மருவித் தொழும் மனமே தந்தாய்” என்கிறபடியே ஜ்ஞாநத்தை எனக்கு உபகரித்தருளி, என்னை பகவதந்யார்ஹ சேஷபூதனாம்படி கடாக்ஷித்தருளின பின்பென்றபடி. (என்னெஞ்சில் பொருத்தப்படாது) இப்படி தேவரீர் படாதன பட்டு திருத்தத் திருந்தின வென் மநஸ்ஸிலே இசையாது.

**விளக்கம்** – (திருமகள் கேள்வனுக்காக்கிய பின்) - திருவாய்மொழி (2-8-4) – நலம் அந்தமில்லதோர் நாடு - என்பதற்கு ஏற்ப உள்ளதான பரமபதம் சென்றடைந்த பின்னரே வரக்கூடியதான இத்தகைய அடிமை என்ற ஞானத்தை, இந்தப் பூமியில் உள்ளபோதே எனக்கு ஏற்படுத்தினார். அதனையே பலமாகக் கொண்டு, திருவாய்மொழி (1-9-3) – பூமகளார் தனிக்கேள்வன் - என்பதற்கு ஏற்ப அவனுடைய அந்தரங்கமான கைங்கர்யங்கள் உட்பட அனைத்தையும் நான் செய்யலாம்படிச் செய்தார். இப்படியாக, எனக்கு ஞானம் அளித்தவனுக்கு எனது உயிரை எழுதிக் கொடுக்கும்படிச் செய்த பின்னர். அதாவது, திருவாய்மொழி (2-7-7) – மருவித் தொழும் மனமே தந்தாய் - என்பதற்கு ஏற்ப ஞானத்தை அளித்து, எனக்கு உதவி செய்து, என்னை மற்ற யாருக்கும் வசப்படாமல் பகவானுக்கு மட்டுமே வசப்பட்டு அடிமையாகும்படிக் கடாக்ஷித்த பின்னர். (என்னெஞ்சில் பொருத்தப்படாது) - இவ்விதம் மிகவும் சிரமப்பட்டு உம்மால் திருத்தப்பட்ட பின்னர் திருந்திய எனது மனம் வேறு எதிலும் ஈடுபடாது.

**வ்யாக்யானம்** – (எம்மிராமாநுசா) "அஸ்மத் குரோர்" என்கிறபடியே எனக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணி உபகரித்தருளின எம்பெருமானாரே. (மற்றோர் பொய்ப்பொருள்) தேவரீர் அறிவித்த யதார்த்த ஜ்ஞாநமொழிய அதுக்குப் புறம்பாயிருப்பதொரு அயதார்த்தமான அர்த்தத்தையும். (பொருத்தப்படாது) வலியப் பொருத்திலும் பொருந்தாது. பொருத்துதல் – இசைத்தல். "இந்த மண்ணகத்தே திருத்தி" என்று "இருள் தருமா ஞால"த்தில் திருத்துகையிலுண்டான அருமையைச் சொல்லிற்றாகவுமாம். தீபம் வ்யாபித்தவிடத்தில் திமிர வ்யாப்திக்கு வழியில்லாதாப் போலே, ஜ்ஞாநம் புக்கவிடத்தில் அஜ்ஞாநம் புகுர வழியில்லை யென்றதாய்த்து. "ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேர்ஜுந" என்னக் கடவதிறே.

**விளக்கம்** – (எம் இராமாநுசா) – அஸ்மத் குரோர் - என்பதற்கு ஏற்ப எனக்கு ஏற்பட்டிருந்த அறியாமை அனைத்தையும் விலக்கிய எம்பெருமானாரே! (மற்றோர் பொய்ப்பொருளே) - நீவிர் எனக்கு ஏற்படுத்திய உண்மையான ஞானம் அல்லாமல் வேறு எந்த ஒரு கருத்தும். (பொருத்தப்படாது) – வலிய முறையில் எனது நெஞ்சத்தில் புகுத்தப்பட்டாலும், அதில் பொருந்தாது. "இந்த மண்ணகத்தே திருத்தி" என்பதன் மூலம், அறியாமை என்ற இருளை ஏற்படுத்தவல்ல இந்த லோகத்தில் உள்ளவர்களைத் திருத்தும் செயலில் உள்ள கடினத்தை உரைத்தார் என்று கூறலாம். தீபத்தின் ஒளியானது பரவிய இடத்தில் கண்களுக்கு அறியாமை ஏற்படாது என்பது போன்று, ஞானம் புகுந்த இடத்தில் அஜ்ஞானம் ஏற்பட வழியில்லை. கீதை (4-37) – ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா – ஞானம் என்னும் அக்னியானது அனைத்து கர்மங்களையும் எரித்து சாம்பலாக்குகிறது - என்றது காண்க.

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

...தொடரும்